## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

90. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நெய்யூரிலுள்ள அனைத்து நாட்டு புற்று நோய் மையத்திற்குச் சொந்தமான ஆம்புலென்ஸ் வண்டிக்குச் செலுத்தத்தக்க வரியைக் குறைப்பது தொடர்பாக, உள்துறையின் 30—12—1983 ஆம் நாளிட்ட 2759 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது.]

91. வளர்ச்சித்துறையின் 13—12—1949 ஆம் நாளிட்ட அறிவிக்கையில் வெளியிட்ட விதிகளில் செய்யப்பட்ட திருத்தம் தொடர்பாக வன-மீன்துறையின் 7—9—1983 ஆம் நாளிட்ட 696 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு தனியார் காடுகளைப் பாதுகாத்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1949) 12 எ (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

92. தமிழ்நாட்டு கடற்கரை ஓரப்பகுதியிலிருந்து கடல்நீரில் மூன்று மைல் அளவிற்குள் வலை போட்டு மீன்பிடிப்பது தொடர்பாக வன-மீன் துறையின் 27—6—1983 ஆம் நாளிட்ட 765 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடலில் மீன் பிடித்தலை முறைப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1983) 26 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

93. சென்னை தொலைக்காட்சி நிலையம் செலுத்தத்தக்க வரி அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்தல் தொடர்பாக, உள்துறையின் 22—11—1983 ஆம் நாளிட்ட 2444 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

94. திருவனந்தபுரம், திருவாளர்கள் கேரளா சரக்குப் போக்குவரத்துக் கூட்டுறவுக் கழகம் செலுத்தத்தக்க வரி அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்தல் தொடர்பாக, உள்துறையின் (போ. 1) 30—12—1983 ஆம் நாளிட்ட 2760 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

1984 மார்ச் 6]

95. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணைக் குழுவின் விதிமுறைகளில் திருத்தங்கள் செய்தது தொடர்பாக பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர்) துறையின் 22—6—1983 ஆம் நாளிட்ட 551 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

96. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக் குழுவின் விதிமுறைகளில் திருத்தங்கள் செய்தது தொடர்பாக, பணியாளர்-நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர் எம்.) துறையின் 30—11—1982 ஆம் நாளிட்ட 1136 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

97. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் விதிமுறைகளில் திருத்தங்கள் செய்தது தொடர்பாக, பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் (பணியாளர் எம்.) 22—6—1983 ஆம் நாளிட்ட 550 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

98. வேளாண்மைத்துறையின் 19—1—1970 ஆம் நாளிட்ட அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக, வேளாண்மைத்துறையின் 23—11—1983 ஆம் நாளிட்ட 1986 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

99. சில குறிப்பிட்ட இனங்களைப் பொறுத்தவரையில் புதுக்கோட்டை மாவட்டம், காம்பக்குடி அங்காடிப்பகுதியை அறிக்கையிட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது தொடர்பாக, வேளாண்மைத்துறையின் 19—11—1983 ஆம் நாளிட்ட 1975 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனையதாள்கள்.**

இல்லை.